## நோய்கள் மற்றும் இன்னல்களிலிருந்து பாதுகாப்பு கோரும் துஆ

1 ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய வீட்டார்களுக்காக எவ்வகையில் பாதுகாப்பு தேடுவார்கள் என்றால், அவர்கள் ﷺ தன்னுடைய வலது கையினால் தடவியவாறு இந்த துஆவை ஓதுவார்கள்:

اللَّهُمَّ رَبَّ النَّاس أَذْهب البَاسَ، واشْفه وأَنْتَ الشَّافي، لاَ شفَاءَ إلاَّ شفَاؤُكَ شفَاء لاَّ يُغَادرُ سَقَما

*பொருள்: எங்கள் இறைவனே, மனிதர்களுடைய இரட்சகனே, இந்தத் தீங்கை (நோயை) நீக்கிவிடு, அதற்கான நிவாரணம் அளிப்பாயாக, நீயே பிணி தீர்ப்பவனாக இருக்கின்றாய், நோய்களுக்கான நிவா ரணம், நீ அளிக்கும் நிவாரணம் மட்டுமே, அந்த நிவாரணம் எந்த நோயினையும் விட்டு வைக்காது (புக்ஹாரி, முஸ்லிம்).*

2 ஹஜ்ரத் உத்ஸ்மான் பின் அபில் ஃஆஸ் (ர) அவர்கள் அறிவிக்கிறார் கள், இறைத்தூதர் ﷺ அவர்களிடம் நான் இஸ்லாத்தைத் தழுவிய தற்கு முன்பிருந்தே என்னுடைய உடலில் தொடர்ந்து நிலைத்திருக் கும் ஒரு நோயைப்பற்றி எடுத்துக் கூறினேன். இறைத்தூதர் ﷺ அவர் கள் கூறினார்கள், உம்முடையை கையை உடலில் எங்கு வலி ஏற்படு கின்றதோ அதன்மீது வைத்து இந்த துஆவை ஓதுங்கள்:

بسْم اللّٰه الرَّحْمٰن الرَّحيْم، أَعُوذُ بعزَّة اللّٰه وَقُدْرَته منْ شَرّ مَا أَجدُ

*பொருள்: அருளாளனும் கருணைமிக்கவனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால், அல்லாஹ்வின் மகிமை மற்றும் அவனுடைய வல்ல மையின் பொருட்டாக நான், அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் இந்தத் தீங்கிலிருந்து பாதுகாப்பு தேடுகின்றேன் (முஸ்லிம், அபூ தாவூத்)*

3 ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், எங்களில் எவருக் கும் ஒரு இன்னல் ஏற்பட்டாலோ அல்லது ஒரு கொப்புளம் அல்லது காயம் ஏற்பட்டாலோ இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய விரலை தரையின்மீது வைத்து எடுப்பார்கள் மற்றும் இந்தத் துஆவை ஓதுவார்கள்:

www.uzairfalahi.com

**بسْم اللَّه ، تُرْبَةُ أَرْضنَا، بريقَة بَعْضنَا، يُشْفَى سَقيمُنَا، بإذْن رَبنَا**

பொருள்: *அல்லாஹ்வின் திருப்பெயரால், எங்களுடைய பூமியின் புழுதியினாலும் எங்களில் சிலரின் உமிழ் நீரினாலும் எங்கள் இரட்சகனின் கட்டளையினாலும் எங்கள் நோயாளிகள் குணமடைவார்கள்* (புக்ஹாரி).

* * *

www.uzairfalahi.com